

சேலம் மத்திய மாவட்டதி.மு.க பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் இரா. இராஜேந்திரன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். உடன் சேலம் மேற்கு மாவட்ட கழக செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி., மாவட்ட நிர்வாகிகள் ஜி. கே.சுபாசு, மு.கார்த்திகேயன், சி.ராஜேந்திரன், கே.டி.மணி, தாமரைகண்ணன், தொகுதி பொறுப்பாளர்கள் பி.ஏ.ஆர். இளங்கோவன், இ.ஜி.சுகவனம் உட்பட நிர்வாகிகள் இருந்தனர்.

### 199 மூத்த குடிமக்களுக்கு

# பயண வழிப் பைகள் வழங்கி - அறுபடை வீடு ஆன்மிகப் பயணம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தொடங்கி வைத்தார்!

சென்னை, ஆக. 29 –

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, அமைச்சர் பி.கே.சேகர்பாபு 26.08.2025 அன்று சென்னை, கந்தகோட்டம் முத்துக்குமாரசாமி திருகோயிலில் அறுபடை வீடு ஆன்மிகப் பயணத்தின் முதற்கட்ட பயணத்தில் பங் கேற்கும் 199 மூத்த குடிமக்களுக்கு பயண வழிப் பைகளை வழங்கி, ஆன்மிகப் பயணப் பேருந்துகளை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு பொறுப்பேற்ற பிறகு, இந்து சமய அறநிலையத்துறை சார்பில் தமிழ்க் கடவுள் முருகனுக்கு பெருமை சேர்க்கும் வகையில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 60 வயது முதல் 70 வயதிற்குட்பட்ட மூத்தக் குடிமக்கள் பயன்பெறும் வகையில் அறுபடைவீடுகளுக்கு ஆன்மிகப் பயணமாக நான்கு நாட்கள் குளிர்சாதன வசதியுடன் கூடிய பேருந்தில் கட்டணமில்லாமல் அழைத்துச் செல்லப்பட்டு சிறப்பு தரிசனம் செய்து வைக்கப்படுகிறது. கடந்தாண்டு இத்திட்டத்தில் 2015 பக்தர்கள் பயன்பெற்றனர். இந்தாண்டு ரூ.2.50 கோடி அரசு நிதியில் 2,000 பக்தர்கள் அறுபடைவீடுகளுக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர். முதற்கட்டப் பயணத்தை இன்றைய தினம் கந்தக்கோட்டத்தில் 199 பக்தர்களுடன் ஆன்மிகப் பேருந்தை தொடங்கி வைத்தோம்.

இந்த அரசு பொறுப்பேற்ற பின், 3,412திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது. வரும் ஜனவரி மாதத்திற்குள் 4,000 திருகோயில்களை எட்டி வரலாற்று சாதனை படைக்கும். முதலமைச்சர் அவர்களின் அனுமதியை பெற்று முருகனுக்கு பெருமை சேர்க்கும் வகையில் மருதமலையில் ரூ.110 கோடியில் 204 அடி உயரத்திலும், ஈரோடு மாவட்டம் திண்டலில் ரூ.30 கோடியில் 207 அடி உயரத்திலும், இராணிப்பேட்டை மாவட்டம், குமரகிரியில் ரூ.6.83 கோடியில் 114 அடி உயரத்திலும் முருகன் சிலைகள் நிறுவப்பட உள்ளது. இதுவரை திருப்பர ங் குன்றம், திருச்செந்தூர், பழனி உள்ளிட்ட 131 முருகன் திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது. அறுபடை வீடுகள் மற்றும் அறுபடை வீடு அல்லாத முருகன் திருக்கோயில்களுக்கு ரூ.1,085.63 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இராமேசுவரம் – காசி ஆன்மிகப் பயணத்தை முதன்முதலில் தொடங்கியதோடு, இதுவரை ரூ. 2.30 கோடி அரசு நிதியில் 920 பக்தர்களும், ஆடி மாதத்தில் அம்மன் திருக்கோயில்களுக்கு ரூ.75 இலட்சம் அரசு நிதியில் 3004 பக்தர்களும், புரட்டாசி மாதத்தில் பெருமாள் திருக்கோயில்களுக்கு ரூ.25 இலட்சம் அரசு நிதியில் 1014 பக்தர்களும் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். மானசரோவர் மற்றும் முக்திநாத் ஆன்மிகத் தலங்களுக்கு சென்று வரும் பக்தர்களுக்கு வழங்கப்படும் அரசு மானியத்தை உயர்த்தி தந்த அரசு இந்த அரசாகும். முதலமைச்சர் அவர்களின் எண்ணத்தில் உதித்திட்ட இப்படிப்பட்ட புதிய திட்டங்களை செயல்படுத்தி திராவிட மாடல் அரசு ஆன்மிக அரசாக திகழ்ந்து வருகிறது. இதனால்தான் நான்கு முனைகளிலிருந்து இந்த அரசின் மீது தாக்குதல்கள் செலுத்தப்படுகின்றன. அறையில் உட்கார்ந்து கொண்டு சங்கிகள் தீட்டும் திட்டங்களை முறியடிக்கும் வகையில் நீதிமன்றங்களில் அனைத்து வழக்குகளிலும் இந்து சமய அறநிலையத்துறை தனது நியாயமான வாதத்தை எடுத்து வைத்து வென்று வருகிறது. இதுதொடரும். வரலாறு படைப்போம். இன்றைய தினம் ஆன்மிகப் பயணத்தை தொடங்கியுள்ள அனைவருக்கும் எனது வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒருவேளை கூட பூஜை செய்ய இயலாத திருக்கோயில்களை கண்டறிந்து ஒருகால பூஜை திட்டத்தில் சேர்த்து அதற்கான வைப்புத் தொகையை ரூ.2.50 இலட்சமாக உயர்த்தி வழங்கி வருவதோடு, அதன் அர்ச்சகர்களுக்கு முதன்முறையாக மாதந்தோறும் ரூ.1,000/ ஊக்கத்தொகையாக வழங்கி வருகிறோம். இத்திட்டத்தின்கீழ் 19,000 திருக்கோயில்கள் பயன்பெற்று வருகின்றன. இந்து சமய அறநிலையத்துறை திருக்கோயில்கள் குறித்த கணக்கு வழக்குகள் வெளிப்படை தன்மையாக கையாளப்படுவதோடு, கணினி மூலம் பதிவேற்றம் செய்யப்படுகிறது. இதுகுறித்த முழு விவரத்தை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ள தினத்தில் அபிடவிட்டாக தாக்கல் செய்வோம்.

பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன் அரண்டு போய் இருக்கின்றார். இந்த ஆட்சியின் மீது ஆன்மிகத்திற்கு எதிரான ஆட்சி என்ற வலையை வீசலாம் என்று நினைத்தவர்களுக்கு வலையை அறுத்து இது ஆன்மிக ஆட்சி என நிரூபித்த பெருமை நமது முதல்வர் அவர்களையே சாரும். கேரள அரசின் அழைப்பை ஏற்று உலக ஐயப்ப சங்கமம் மாநாட்டில் கலந்து கொண்டால் அவர்களின் பிம்பம் முழுவதும் இடிந்து தரைமட்டம் ஆகும் என்று பயந்து நயினார் நாகேந்திரன் அறிக்கை விட்டு ள்ளார். கேரள மாநில அறநிலையத்துறை அமைச்சர் வாசன் அவர்கள் முதலமைச்சர் அவர்களை சந்தித்து அழைப்பு விடுத்த போது ஏற்கனவே திட்டமிட்ட பயணத் திட்டத்தில் மாறுதல் செய்ய இயலாத சூழ்நிலை இருப்பதை தெளிவாக எடுத்துக் கூறினார்கள்.

தமிழ்நாடு அரசின் சார்பில் நானும், அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் அவர்களும் மாநாட்டில் பங்கேற்க உள்ளோம். நயினார் நாகேந்திரனின் பயத்திற்கான முடிவு 2026 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் அவர் போட்டியிடுகின்ற சட்டமன்ற தொகுதியையே திமுக கைப்பற்றும் என்பதை உறுதியாக தெரிவித்துக் கொள்கிறேன்.

திருச்செந்தூர் அர்ச்சகர்களிடம் ஒளிவுமறைவு இல்லாத நிலை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்கின்ற போது அவர்கள் நீதிமன்றத்திற்கு செல்கிறார்கள். நீதிமன்றத்தில் எங்கள் தரப்பு நியாயத்தை எடுத்துக் கூறி தீர்ப்பினைப் பெற்று வருகின்றோம். வெகு விரைவில் ஒழுங்குபடுத்தி எவ்விதக் கையூட்டும் இல்லாமல் தரிசனம் செய்கின்ற சூழ்நிலையை நிச்சயம் துறை மேற்கொள்ளும். நடவடிக்கை எடுக்கும்.

திருவரங்கம் திருக்கோயிலை மத்திய தொல்லியல்துறை கட்டுப்பாட்டில் கொண்டுவர வேண்டும் என திருச்சி நாடாளுமன்ற உறுப்பினர் துரை வைகோ அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளதை ஊடகங்கள் மூலம் அறிந்தேன். திருவரங்கம் திருக்கோயிலானது இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் இருந்தால்தான் அதன் தொன்மையை பாதுகாக்க முடியும். மத்திய தொல்லியல் துறை கட்டுப்பாட்டில் உள்ள பல்வேறு திருக்கோயில்களில் சிறிய மராமத்து பணி மேற்கொள்ள வேண்டும் என்றாலும், அவர்களை அணுகி அனுமதி பெற்று செய்வதற்கு மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. இத்தகைய சூழ்நிலையை முதலமைச்சர் அவர்களின் அனுமதியை பெற்று துரை வைகோ அவர்களை சந்தித்து கூட்டணி தர்மத்தோடு விளக்கமாக எடுத்துக் கூற உள்ளேன்.

முதலமைச்சர் அவர்கள் இருமொழிக் கொள்கையில் உறுதியோடு இருப்பவர். எந்த ரூபத்தில் இந்தியை நுழைத்தாலும் எத்தகைய தியாகத்திற்கும் தன்னை ஆட்படுத்தி அதனை எதிப்பதற்கு துணிவோடு களத்தில் இருக்கும் இரும்பு மனிதர். எவரும் எந்த மொழியையும் படிக்க கூடாது என்பதல்ல. எந்த மொழியையும் திணிக்க கூடாது என்பதுதான் எங்களது கொள்கையாகும். ஆகவே முதலமைச்சர் அவர்கள் எதற்கும் தயங்க மாட்டார்.

விஜய் அவர்கள் இரண்டு மாநாடுகளைமுடித்திருக்கின்றார். ‘‘நரியின் வேசம் கலைந்து போச்சு. டும் டும் டும், இராஜா வேசம் கலைந்து போச்சு. டும் டும் டும்,’’ என்பதுபோல் அனைத்துத் தரப்பினரின் விமர்சனங்களையும் தாங்கி சென்று கொண்டிருக்கிறார். அவர் இன்னும் இரண்டு, மூன்று மாநாடுகள் நடத்தினாலே காலி பெருங்காய டப்பா போல் ஆகி விடுவார் என்பதே எனது கருத்தாகும். அவரது உயரம் அவ்வளவுதான்.

முதலமைச்சர் அவர்களின் புகழ்கொடி இமயத்தின் உச்சியில் பறக்கிறது. தாயுமானவரான எங்கள் முதல்வர் இன்றைய தினம் பசியறியா மழலை செல்வங்களுக்கு காலை சிற்றுண்டி திட்டத்தை விரிவாக்கம் செய்து தொடங்கி வைத்துள்ளார். அதில் கலந்து கொண்ட பஞ்சாப் மாநில முதலமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது உடனடியாக தனது அமைச்சரவையை கூட்டி இந்த சிறப்பான திட்டத்தை தங்கள் மாநிலத்திலும் கொண்டு வருவேன் என்று கூறினார்.

திராவிட மாடல் அரசு தனது திட்டங்களால் ஒன்றியத்திற்கு மட்டுமல்ல உலகத்திற்கே வழிகாட்டுதலாகவும் இருக்கின்றது. விஜய் அவர்களின் சிறுபிள்ளைத்தனமாக பேச்சிற்கு பதில் சொல்லி எங்களது நேரத்தை வீணடிக்க விரும்பவில்லை. 2026 –ல் சட்டமன்ற தேர்தலில் களத்தில் சந்திப்போம், நாங்கள் உறுதியாக 200 தொகுதிகளில் வென்று முதலமைச்சர் அவர்களின் கரத்தில் ஒப்படைப்போம் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர்கள் டாக்டர் சி.பழனி, திருமதி கோ.செ.மங்கையர்க்கரசி, இணை ஆணையர்கள் திருமதி கி.ரேணுகாதேவி, திருமதி ஐ.முல்லை, மாநகராட்சி மண்டல குழுத் தலைவர் பி.ஸ்ரீராமுலு, உதவி ஆணையர்கள் க.சிவக்குமார், கி.பாரதிராஜா, திருக்கோயில் அறங்காவலர் குழு தலைவர் டி.அசோக்குமார் மற்றும் அறங்காவலர்கள், திருக்கோயில் செயல் அலுவலர் சிவக்குமார் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



நாகை மாவட்டம் நாகை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே உள்ள முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் மாவட்ட விளையாட்டரங்கில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் மாவட்ட அளவிலான முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளை நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என்.கௌதமன், நாகை மாவட்ட ஆட்சித்தலைவர் ப.ஆகாஷ் ஆகியோர் கொடி அசைத்து தொடங்கி வைத்தனர். உடன் நாகை சட்ட மன்ற உறுப்பினர் முகமதுஷநவாஸ், நகரக் கழகச் செயலாளர்கள் நாகை இரா.மாரிமுத்து, நாகூர் எம்.ஆர்.செந்தில்குமார் மற்றும் பலர் உள்ளனர்.

# இந்திய ஒன்றியத்தின் விளையாட்டுத் தலைநகரமாக தமிழ்நாட்டை உயர்த்திட, அயராது உழைப்போம்!



ஒரு கொள்கைக்காக பயணம் செய்வது நம் இயக்கத்திற்கு புதிதான காரியமல்ல. முதல் இந்தி எதிர்ப்பு போராட்டத்தின்போது திருச்சியில் அஞ்சாநெஞ்சன் பட்டுக்கோட்டை அழகிரிசாமி அவர்கள் தலைமையில் தமிழர் பெரும் படை திருச்சியில் இருந்து நடைபயணமாக சென்னை வந்தடைந்தனர். மக்களிடையே தாங்கள் நடைபயணம் மேற்கொள்வதற்கான காரணங்களை எடுத்துக்கூறி இடையிடையே கூட்டங்களை நடத்தி மொழி உரிமைப் பிரச்சாரங்களை மேற்கொண்டது வரலாறு. அதில் நாம் வென்றது சரித்திரம்.

அதே போல் நம்முடைய உயிர்நிகர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் திருச்செந்தூர் கோயில் அறநிலையத் துறை பரிசோதனை அதிகாரி சுப்பிரமணிய பிள்ளை மரணம் தொடர்பாக, 1982–ல் மதுரை முதல் திருச்செந்தூர் வரை 200 கி.மீ. தொலைவுக்கு நடத்திய ‘நீதி கேட்டு நெடும்பயணம்’ நீதியின் மீது நம்பிக்கைகொண்ட எவராலும் மறக்க முடியாத ஒன்று.

2016 சட்டமன்றத் தேர்தலில் இன்றைய கழகத் தலைவர் – திராவிட மாடல் நாயகர் அவர்கள் தமிழ்நாடு முழுவதும் உள்ள 234 சட்டமன்றத் தொகுதிகளிலும் மேற்கொண்ட ‘நமக்கு நாமே’ பிரச்சார பயணம் மக்களிடையே பெரும் எழுச்சியை ஏற்படுத்தியது.

2024–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மாநில உரிமை மீட்பு முழக்கத்துடன் சேலத்தில் துணை முதலமைச்சர்– நம் இளந்தலைவர் அவர்கள் நடத்திய மாபெரும் மாநில மாநாட்டை முன்னிட்டு தலைநகரான சென்னையில் இருந்து குமரிமுனை வரை இருசக்கர வாகன பேரணி திட்டமிடப்பட்டு வெற்றிகர மாக நடந்து முடிந்தது. அந்த மாநாட்டிற்கு வந்த கொள்கை வலு கொண்ட இளைஞர் கூட்டம் சேலத்தை ஸ்தம்பிக்க வைத்ததை நாம் கண்டோம்.



இப்படி மொழி உரிமைக்காகவும், மாநில உரிமைக்காகவும், நீதிக்காகவும் திராவிட இயக்கமும் திராவிட முன்னேற்றக் கழகமும் மேற்கொண்ட பயணங்களின் தொடர்ச்சி தான் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு துறையுடன் இணைந்து கழக விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பாக, சென்னை முதல் தனுஷ்கோடி வரை ‘முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகள் 2025 – 26’– காக மேற்கொண்ட பிரச்சார பயணம். மேற்குறிப்பிட்ட பயணங்கள் எல்லாம் உரிமையையும்– நீதியையும் வேண்டி நடைபெற்றன என்றால் இந்த பயணம் சாதனையாளர்களை– திறமையானவர்களை அடையாளம் காண இளந்தலைவர் அவர்களின் ஆலோசனையின் பேரில் நாங்கள் மேற்கொண்டது.

கழக இளைஞர் அணி செயலாளர் அவர்கள் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சராக பொறுப்பேற்றது முதல் அவரது முயற்சியில், இந்திய அளவிலும் உலக அளவிலும் பல தனித்துவமான போட்டிகளை நம் முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசு நடத்தி வருகிறது.

ஒருபக்கம் இது சர்வதேச அளவில் சாதனைகளை படைக்க வீரர்களை தயார்படுத்துகிறதென்றால், மறுபக்கம் கிராமப்புறங்களிலும் விளிம்பு நிலையில் இருக்கும் திறமையான விளையாட்டு வீரர்களை கண்டெடுக்கும் முயற்சியிலும் இறங்கியுள்ளது.

அத்தகைய சிறப்புவாய்ந்த நோக்கத்தை அடையும் முன்னெடுப்புகளில் ஒன்று தான், முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள். மாவட்டந்தோறும் நடைபெறும் இப்போட்டிகளில் திறமை வாய்ந்த மாணவ மாணவியர் அதிகளவில் கலந்துகொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன் ஒரு பிரச்சார பயணத்தை திட்டமிட எண்ணினோம்.

இப்பயணத் திட்டத்தை பற்றி கூறிய போது, வழக்கமான தன் புன்னகையோடு, விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பாகவே இப்பயணத்தை முன்னெடுக்கலாமே என்று ஊக்கமும் உந்துதலும் வழங்கினார் அணி செயலாளர் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் அவர்கள். இந்நிகழ்வின் தலைமை ஒருங்கிணைப்பாளராக இருந்து பிரச்சார பயணத்தை நேர்த்தியாக திட்டமிட்டவர்கள் விளையாட்டு மேம்பாட்டு அணியின் துணைச் செயலாளர்கள் வே. கௌதமன், முகமது இஷ்ரத், மற்றும் ஆனந்த் தியாகராஜன் ஆகியோர் திறமையான விளையாட்டு வீரர்களை கண்டடைவதற்கான பிரச்சாரம் என்று சொல்லியதும் இவர்கள் காட்டிய ஈடுபாடு மிகுந்த நம்பிக்கையை அளித்தது.



நிவேதா ஜெசிக்கா
கழக விளையாட்டு மேம்பாட்டு அணி மாநிலத் துணைச் செயலாளர்

இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக துணை முதலமைச்சர் அவர்களின் செவிகளுக்கு இச்செய்தி சென்றபோது மிகுந்த உற்சாகத்துடன் இப்பிரச்சார பயணத்தை தானே தொடங்கி வைப்பதாக தெரிவித்து இன்ப அதிர்ச்சி அளித்தார். அவரது கண்ணசைவில் குறிஞ்சி இல்லத்தில் தொடக்க விழா நிகழ்ச்சி மிகச்சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டது. விடுதலை தினத்தன்று காலை தனது இல்லத்தில் மூவர்ண கொடியை ஏற்றிவைத்துவிட்டு, எங்களது பயணத்தையும் கொடியசைத்து தொடங்கி வைத்தார் துணை முதலமைச்சர் அவர்கள். பயணம் குறித்து விரிவாக கேட்டறிந்து கழக மற்றும் அரசு நிர்வாகிகளிடம் உரிய ஏற்பாடுகளை எல்லாம் செய்ய சொல்லியது என அவரின் அக்கறை எங்களை எல்லாம் அகமகிழ செய்தது.

இரண்டு நாட்கள், ஒன்பது மாவட்டங்கள், ஐம்பத்தி இரண்டு ஊர்கள், 1250 கிலோ மீட்டர் பயணம் என இந்த விழிப்புணர்வு பேரணி மாபெரும் பிரச்சார பேரணியாக தொடங்கியது. இந்த பேரணியில் என் தலைமையில் இந்திய பெண்கள் மோட்டார் சங்கத்தை சேர்ந்த திருமதி மான்சி, திவ்யா, செல்வி சுமித்ரா, கீதா மற்றும் ஆதேஷ், ஆதித்யா, சுரேன், பிரின்ஸ், ஹரி ஆகிய இருசக்கர வாகன ஓட்டிகளும் பங்கேற்றனர்.

இப்பயணத்தை நாங்கள் பெரிய அளவிலான எதிர்பார்ப்புகள் எதுமின்றி தான் தொடங்கினோம், ஆனால் வழி எங்கும் எங்களுக்கு கிடைத்த மிக சிறப்பான வரவேற்பு பயணத்தை மேற்கொள்ள உகந்த உற்சாகத்தை வழங்கியது. மாவட்ட செயலாளர்கள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள்–இளைஞர் அணி நிர்வாகிகள் – விளையாட்டு மேம்பாட்டு அணி நிர்வாகிகள்– விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர்கள்– விளையாட்டு வீரர்கள்–பொதுமக்கள் என வழி நெடுக அவர்கள் வழங்கிய வரவேற்பில் நெகிழ்ந்தோம். துவக்க விழாவிற்கு வருகை புரிந்து இப்பேரணியை சிறப்பித்த பள்ளிக் கல்வித்துறையின் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்களுக்கும் பேரணியை ஊக்குவித்த கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் அவர்களுக்கும் ராமேஸ்வரத்தில் பேரணிக்கு சிறப்பான ஏற்பாடுகளையும், சிறப்பான வரவேற்புகளையும் அளித்த ராமநாதபுரம் மாவட்ட கழகத்தின் செயலாளர் காதர்பாட்சா என்கிற முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ அவர்களுக்கும்

இப்பேரணி வெற்றிகரமான பேரணியாக அமைய உறுதுணையாக இருந்த, விருதுநகர் பிரபா, அரியலூர் அயலக அணி ஆசைதம்பி, மாவட்ட அமைப்பாளர்கள் ஜஹாங்கீர், அசாருதீன், விழுப்புரம் பாலாஜி, நாராயணன், விழுப்புரம் தினகரன், திருச்சி கார்த்திக், அன்பழகன், முத்துதீபக், சிவகங்கை செந்தில் குமார், ராஜராஜன், குமரன், உதயகுமார், கவாஸ்கர் ஆகியோருக்கும் எங்கள் அன்பு கலந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

சென்னையில் இருந்து புறப்பட்டு செங்கல்பட்டு, காஞ்சிபுரம், விழுப்புரம், பெரம்பலூர், திருச்சி, புதுக்கோட்டை, சிவகங்கை, ராமநாதபுரம் என ஒன்பது மாவட்டங்களையும், சென்னையிலிருந்து துவங்கி தாம்பரம் வழியாக செங்கல்பட்டு, மதுராந்தகம், அச்சரபாக்கம், திண்டிவனம், விக்கிரவாண்டி, விழுப்புரம், அரசூர், கெடிலம், உளுந்தூர்பேட்டை, கஞ்சமுடி, செப்பாக்கம், வேப்பூர், வெங்களூர், ராமநத்தம், தொழுதூர், மங்களம், பெரம்பலூர், தஞ்சம், குறிச்சி, சமயபுரம், திருச்சி, கீரனூர், குளத்தூர், நத்தம் பண்ணை, புதுக்கோட்டை, அரசம்பட்டி, திருமயம்,

காரைக்குடி, தேவகோட்டை,கற்காத்தகுடி. ஏ.ஆர். மங்கலம், தேவிபட்டினம், தேவகோட்டை, மாதிரிதான் கோட்டை கண்ணன்கோட்டை, ஆரியன்வயல், பெரிய கீரமங்களம். குமுனி, பரனூர், கருங்குடி, சிங்கனேந்தல், தேவிப் பட்டினம், ஆலங்குளம், ஆர் எஸ் மங்களம், பரமக்குடி, ராமநாதபுரம், சக்கரக்கோட்டை, வாலாந்தரவை, மண்டபம், ராமேஸ்வரம், தனுஷ்கோடி வரையிலான எங்கள் பயணம் இளம் விளையாட்டு வீரர்களிடையே இப்போட்டி குறித்த ஒரு புரிதலை உண்டாக்கியது. குறிப்பாக இதில் உள்ள போட்டிகள் குறித்து அவர்களிடம் எடுத்துக்கூறி விண்ணப்பிக்கும் முறையை விலக்கியதோடு மட்டுமல்லாமல் பல இடங்களில் அவர்களுடன் இணைந்து சில விளையாட்டுகளை பயற்சி செய்து மகிழ்ந்தோம்.



பொதுமக்களுக்கென பிரத்தியோகமாக முதலமைச்சர் விளையாட்டு போட்டிகளில் இருக்கும் விளையாட்டுகளை எல்லாம் எடுத்துக்கூறி அவர்களையும் இணையதளத்தில் சென்று விண்ணப்பிக்க கேட்டுக்கொண்டோம்.

மேலும் இப்பயணம் சலிப்பின்றி சீராக நடைபெற காரணமாக இருந்த விளையாட்டு மேம்பாட்டு துறையின் செயலர் அதுல்ய மிஸ்ரா ஐ.ஏ.எஸ். விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் மேகநாத் ரெட்டி ஐ.ஏ.எஸ்., பொது மேலாளர் திருமதி சுஜாதா ஆகியோருக்கும், நாங்கள் செல்லும் மாவட்டங்களில் எல்லாம் இருந்த இளைஞர் அணி நிர்வாகிகளிடம் உடனடியாக தகவல் தெரிவித்து நாங்கள் கேட்கும் உதவிகளை எல்லாம் செய்து தருமாறு அறிவுறுத்தி இப்பேரணியின் வெற்றிக்கு பெரிதும் உதவிகரமாக இருந்த துணை முதலமைச்சரின் நேர்முக உதவியாளர்கள் அன்பகம் செந்தில், ஒத்துழைப்பு நல்கிய முதுநிலை உதவியாளர் மணிராஜ் ஆகியோருக்கும் இநேரத்தில் நன்றி.

2025–26 ஆம் ஆண்டுக்கான முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகளில் விண்ணப்பிப்பதற்கான காலம் முடிந்து, கடந்த ஆண்டை விட 3 லட்சம் விண்ணப்பங்கள் கூடுதலாக வந்துள்ளது என்ற செய்தி இந்த பயணத்தை பயனுள்ள ஒன்றாக அமைத்துக்கொண்ட நிறைவை அளிக்கிறது. துணை முதலமைச்சர் அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்த இந்த பயணம் தனுஷ்கோடியில் மக்கள் சூழ “களம் நமதே!” என்று வங்க கடலின் அலை ஓசையையும் மீறி உற்சாக குரலில் ஒலித்தது எங்கள் பிரச்சார பயணத்தின் பொன்னான தருணமாக கருதுகிறேன்.

இந்த 1250–கி.மீ தூரம் கொண்ட இப்பிரச்சார பயணம் வெற்றிப் பயணமாக அமைய உடன் நின்ற அனைவருக்கும் இநேரத்தில் நெஞ்சார்ந்த நன்றியை விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பாக தெரிவித்து கொள்கிறேன்.

இந்திய ஒன்றியத்தின் விளையாட்டுத் தலைநகரமாக தமிழ்நாட்டை உயர்த்திட, முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டலில், துணை முதலமைச்சர் அவர்களின் கரம் பற்றி அயராது உழைப்போம்!